**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 30/2019**

தேதி : 31.10.2023

பெயர் : நாராணயசாமி PW3

<u>3 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

வாதிக்கும் பிரதிவாதிக்கும் அவர்களுக்கு உண்டான சொத்தை அவர்களது தகப்பனார் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை உயிலில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு உயில் மூலம் கிடைக்கப்பெற்றதன் என்ற அடிப்படையில் அவரது மனைவியான 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி பதிவுசெய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தை 3ம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். உயில் ஆவணத்திற்கு பிறகு வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் எழுத்து மூலமான பாகப்பிரிவினையோ, அல்லது நீதிமன்றம் மூலம் பாகப்பிரிவினையோ ஏற்பட்டதா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் வாதிக்கும் பிரதிவாதிக்கும்இடையில் பரிவர்த்தனை ஏற்பட்டதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பரிவர்த்தனை எழுத்து மூலமாக ஏற்பட்டதா என்றால் இல்லை. உண்மையிலேயே பரிவர்த்தனை ஏற்பட்டிருந்தால் அது எழுத்து மூலமாக எழுதப்பட்டு பதிவுசெய்ப்பட்டிருக்கும் என்றாலும், இந்த வழக்கிற்காக பரிவர்த்தனை ஏற்பட்டாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால்சரியல்ல. உயில்படி அவரவர் சொத்தை அவரவர் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதியும், பிரதிவாதியும சகோதரர்கள் என்பதால் நிலங்களை அனுபவிப்பதில் ஏற்பட்ட சிக்கல்களை தீர்ப்பதற்காக அவர்களது தாய் மாமன் முன்னிலையில் வாய்மொழி பரிவர்த்தனை செய்துகொண்டார்கள். அவர்களுக்குள் வாய்மொழி பரிவர்த்தனை ஏற்பட்டிருந்தால் நான் எனது முதல் விசாரணையில் பரிவர்த்தனை ஏற்பட்ட தேதி, மாதம், வருடம் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கும், பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட குடும்ப சொத்தான

8 மா நிலத்தை சாகுபடி செய்து வருகிறேன் என்றால் சரிதான். அதனால் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.